# மாநகர் மன்ற அதிகாரிகளுக்கு எதிராக முரட்டுத்தனம் போலீசில் புகார்



முரட்டுத்தனமான செயல்கள் காட்டப்படுவதை மாநகர் மன்றம் ஒருபோதும் ஜீரணித்துக்கொள்ளாது என்று அந்த அறிக்கை கூறியது. அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விவேகமான நடைமுறையைத்தான் நாங்கள்

புத்ராஜெயா, மார்ச் 7-

தலைநகர் கோலாலம்பூரில் இரண்டு ரமலான் பொருட்கள் விற்பனை இடங்களில் நடத்தப்பட்ட சோதனையின்போது லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்த வியாபாரிகள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறை அதிகாரிகள் இருவர் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், ஜாலான் பெந்தெங் ஆகிய இடங்களில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை கூறியது. இது குறித்து தனித்தனியாக இரண்டு போலீஸ் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நலனுக்காக கடமையை மேற்கொள்ளும் அதிகாரிகள் மீது இப்படி

கையாள்கிறோம் என்று அது கூறியது.

சட்டவிதிமுறைகளை மீறுவோருக்கு அதிகாரிகள் முதலில் எச்சரிக்கை விடுக்கின்றனர். அதன் பிறகு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இறுதியாகத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

அனைத்துத் தரப்பினரின் பாதுகாப்பையும் வசதியையும் கருத்தில் கொண்டுதான் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை எடுக்கிறது. அனுமதிக்கப்படாத இடங்களில் அங்காடி வியாபாரம் செய்தால் அது போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும். பாதசாரிகளுக்கும் இடையூறை ஏற்படுத்தும். குப்பைகள் கொட்டும் பிரச்சினையும் உணவுகளின் தூய்மைப் பிரச்சினையும் தலைதூக்கும் என்று அது தெரிவித்தது.